விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 28 வியாழக்கிழமை (14.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 299

## வல்லிபுரம், செல்வச்சந்நிதி இந்து ஆலயங்களுக்குள்

**சப்பாத்துக் கால்களுடன் சென்ற பொலிஸ் அதிகாரி**



(யாழ்ப்பாணம்)

இந்து மத நியதிகளை மதிக்காமல் வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங் 15

## கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தி காணாமல்போன சம்பவம்

### முன்னாள் கடற்படை தளபதிக்கு எதிரான குற்றச்சாட்டை கைவிட்டது சட்டமா அதிபர் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை 15

## சுப்பிரமணியன் சுவாமியுடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு



(கொழும்பு)

பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணி 15

## 30 ஆயிரம் மெட்ரிக் தொன் சேதன உரம்

**நாட்டை வந்தடைந்தது**

(கொழும்பு)

அரசுக்குச் சொந்தமான உர நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட 15

## நாட்டில் மேலும் 31 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் ஒரே நாளில் கொரோனாவால் 31 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் 15

# வடக்கில் வேலையில்லாப் பிரச்சினையே போதை, வன்முறைகள் அதிகரிப்புக்கு காரணம்

### யாழில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன



*(யாழ்ப்பாணம்)*

**வடக்கு மாகாண இளையோருக்கு வேலையில்லாப் பிரச்சினை காரணமாகவே வன்முறைச் சம்பவங்களும் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்தார்.**

வடக்கிற்கு பயணம் மேற்கொண்ட பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரை நேற்று மாலை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.


இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் 15

## சாவகச்சேரியில் பால் குடித்த ஒன்றரை மாத குழந்தை மரணம்

(சாவகச்சேரி)

இரவு பால் குடித்துவிட்டு தூங்கிய ஒன்றரை மாதப் பெண் குழந்தை ஒன்று நேற்று புதன்கிழமை காலை படுக்கையில் இருந்து 15

## அலரிமாளிகையில் நவராத்திரி



15

## நிதியமைச்சு நிவாரணம் வழங்காவிடின் எரிபொருள் விலை அதிகரிக்கும்

### எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில



(கொழும்பு)

நிதியமைச்சு நிவாரணம் அல்லது விலைச் சலுகை வழங்காவிட்டால் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே 15

## அயல் நாடுகளின் உறுதிப்பாட்டை இந்தியா எதிர்பார்க்கிறது

### ஜனாதிபதியிடம் இந்திய இராணுவத் தளபதி

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத்தின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நாராவன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் 15

## போராட்டம் தொடரும்

### அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

அதிபர் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களுக்கு இடையில் இடம் 15

## வடமராட்சி கடற்பரப்பில் பருத்தித்துறை - இந்திய மீனவர்கள் மோதல்

### மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடு 15

## விலை அதிகரிப்பைத் தவிர வேறுவழியில்லை

# வயிறு பற்றி சிந்திக்கும் போது நாடு பற்றியும் சிந்திக்க வேண்டும்

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

(கொழும்பு)

"வயிற்றைப் பற்றி சிந்திக்கும்போது நாட்டைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் எமது சந்ததியினர் எங்கள் மீது, நாட்டைப் பற்றி சிந்திக்கவில்லை என்று சாபமிட நேரிடும்" இவ்வாறு அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டு மக்கள் சுதந்திரம் கிடைத்தது முதல் 70 ஆண்டுகளாக தங்களின் வயிற்றை நிரப்பிக் கொள்வது தொடர்பாக சிந்தித்தனரே தவிர, நாட்டைப் பற்றி சிந்திக்கவில்லை.

உலகளாவிய ரீதியில் நிலவும் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமையால், நாட்டில் பொருட்கள், சேவைகளின் விலைகள் உயர்வடையும் நிலை உருவாகியுள்ளது. இந்த நேரத்தில் இவ்வாறு விலை அதிகரிப்பைத் தவிர வேறு வழிகள் கிடையாது.

உலக அளவில் பொருட்களின் விலைகள் உயர்வடையும் போது இந்த நாட்டில் மாத்திரம் சட்டங்களைப் போட்டு அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது" என்றார். (ம)

## இரு நாடுகளுக்கிடையிலும் சிறந்த உறவு காணப்படுகிறது

### பிரதமரிடம் இந்திய இராணுவத் தளபதி



(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நராவனே நேற்று முற்பகல் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இருநாட்டு இராணுவத்தினருக்கும் இடையே சிறந்த உறவு காணப்படுவதாக ஜெனரல் நராவனே பிரதமரிடம் குறிப்பிட்டார்.

நேர்மறையான இந்தத் தொடர்பானது, இருநாட்டு மக்கள் மற்றும் அனைத்து மட்டத்திலுமான இருதரப்பு உறவை உறுதிப்படுத்துவதற்கு உதவியுள்ளதாகவும் தெரிவித்தார்.

உயர் பயிற்சிகளை வழங்கல் உள்ளிட்ட இந்திய இராணுவம் மிக நீண்டகாலமாக இலங்கைக்கு வழங்கிவரும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராட்டுத் தெரிவித்தார்.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பில் பிராந்திய மட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன் நாட்டிற்காக சேவையாற்றிய பின்னர் படைவீரர்களை கண்காணித்து பராமரிப்பதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (ம)

## இலங்கையிலிருந்து வெளியேற

# பாஸ்போர்ட் அலுவலகத்தில் நீண்டவரிசையில் இளைஞர்கள்

(கொழும்பு)



இலங்கையிலிருந்து ஒரு மில்லியன் சிங்கள இளைஞர்கள் தப்பித்துச் செல்லவுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறிவருகின்ற நிலையில் நேற்று முன்தினம் கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்தில் காணப்பட்ட நீண்ட வரிசை அதனைக் கட்டியம் கூறியுள்ளது.

இதனிடையே வட,கிழக்கு தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறுவதில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

திருகோணமலையிலிருந்து நியூஸிலாந்து செல்ல முயன்ற 63 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாட்டில் நேற்று மேலும் 679 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 679 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 438 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 491,238 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில்கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13,377 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 09.04.1958

மறைவு 17.09.2021

கடந்த 17.09.2021 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குலதெய்வம்

அமரர் சின்னையா கணபதிப்பிள்ளை

( ஓய்வுபெற்ற அரச ஊழியர் - சீமெந்து கூட்டுத்தாபனம் )

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.10.2021) வியாழக்கிழமை கீரிமலையிலும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 17.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் தந்தையின் பிரிவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த அனைவரிற்கும் மனமார்ந்த நன்றிகள்.

(8170)

நாவலர் பண்ணை, ஊற்றுப்புலம்.

077 077 5512 - நிஷாந்தினி
076 287 8158 - ராஜன்

குடும்பத்தினர்



31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 28.10.1942

மறைவு 14.09.2021



கடந்த 14.09.2021 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் ஏகாம்பரம் செல்லப்பா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.10.2021) வியாழக்கிழமை காலை 4.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் துண்டுப் பிரசுரம், பதாதைகள் வெளியிட்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2819)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலோலி தெற்கு, புலோலி.

குடும்பத்தினர்

## எதிர்வரும் 17,18 ஆம் திகதியில்

# விவசாயிகள், மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகோரி வடக்கு, கிழக்கில் போராட்டம்

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அறிவிப்பு



**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தொடர்பாக உள்ள பிரச்சினைகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் போராட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் உரத்தினை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளார்கள் தென் பகுதியிலும் இந்த பிரச்சினையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் குறிப்பாக தென் பகுதியில் அரசுக்கு எதிராக பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேபோல் வடக்கு மீனவர்கள்அத்துமீறிய இந்திய இழுவை படகுகளினால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். குறித்த இந்திய மீனவர்களின் வருகையினை நிறுத்துவதற்கு ஏற்கனவே சட்டமூலம் இயற்றப்பட்டு உள்ள நிலையில் அதனை அரசு நடைமுறைப் படுத்தயங்குகின்றது. எனவே குறித்த சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி முல்லைத்தீவு கடலில் இருந்து பருத்தித்துறைக்கு கடல் வழியாக வந்து அரசுக்கு எதிராக எதிர்ப்பு போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம். அனைத்து போராட்டங்களுக்கும் எமது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்" என தெரிவித்தார். (4-5-33-18-101)

## போராட்டத்தில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர் மீது அடக்குமுறையை பிரயோகியுங்கள்

### திஸாநாயக்க எம்.பி

(கொழும்பு)

சம்பள முரண்பாடு தொடர்பில் தற்போது பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மீது அரசாங்கம் அடக்குமுறையைக் கையாள வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் உயர்கல்வி அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளித்து கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். பணிபகிஷ்கரிப்பை அவர்கள் கைவிடத் தயாராகா விட்டால் அடக்குமுறையை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மலேசியா போன்ற தற்போது வளர்ந்துள்ள நாடுகளில் போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கவில்லை என்றும், அவ்வாறு இடமளித்திருந்தால் அந்நாடுகள் இன்னும் வறுமைநிலை நாடுகளாகவே இருந்திருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (4-5)

## அடுத்த பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் வியாழன், வெள்ளி

(கொழும்பு)

பாராளுமன்றம் அடுத்த வாரம் 21 ஆம் திகதி மற்றும் 22 ஆம் திகதிகளில் கூடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில், கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற விவகாரம் தொடர்பான தெரிவுக் குழுவில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் சில திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன.

அத்துடன் உர பாவனை தொடர்பாக தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பிலும் விவாதம் நடைபெறவுள்ளது. (4-5)



யாழ்.மாவட்ட திரிசாரணர் குழாமினால் ஒழுங்கமைக்கப்பட்ட இரத்ததான முகாம் நேற்று (13.10.2021) புதன்கிழமை கொட்டடி முத்தமிழ் வீதியிலுள்ள மூவேந்தர் சர்வோதய சிரமதான சங்கத்தில நடைபெற்றது.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. தம்பையா தர்மசீலன்



ஆசிரியர், வரணி மத்திய கல்லூரி–NDT (Merit), B.A, PGDE, M.Ed (Second Upper)

அறிவால் அயராது உழைத்து
அருங்கலைகள் பல பயின்று
அகிலம் போற்றும் கல்வியில்
ஆழமாய் படித்து
வரலாற்றுப் பாடத்தில் எல்லையற்ற
அறிவை தனதாக்கி
தென்மராட்சி மாணவர்களுக்கு
வரலாற்றுப் பாடத்தை அமுதமாக்கி
ஆன்றோர்க்கு அணிசேர்க்கும்
கல்வியில் முதுமாணிபெறும்
தர்மசீலன் அவர்கள்
அரும்பணியாலும் பட்டங்களினாலும்
மேன்மைபெற வாழ்த்துகின்றோம்

07.10.2021 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35 ஆம் பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணி (M.ED) பட்டத்தைப் பெற்ற எமது ஆசிரியர் தம்பையா தர்மசீலன் அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ வரணி மத்திய கல்லூரி

(8235)

# சம்பளம் பெற விரும்பாத டோனி



இருபது-20 உலகக் கிண்ணத்திற்கான இந்திய அணி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கப்டன் டோனி சம்பளம் எதுவும் பெற விரும்பவில்லை என பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் இம்மாதம் 17 முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இருபது-20 உலகக் கிண்ணத்திற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்ட 20 நிமிடங்களில், இந்திய அணி ஆலோசகராக முன்னாள் கப்டன் எம்.எஸ்.டோனி நியமிக்கப்பட்டுள்ளதாக பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா அறிவித்தார்.

இந்நிலையில் உலகக் கிண்ணப் போட்டியில் கோலி தலைமையிலான இந்திய அணிக்கு ஆலோசனை வழங்க டோனி பணம் ஏதும் வாங்கவில்லை என ஜெய் ஷா தெரிவித்துள்ளார். (4-5)

# மெத்யூஸீக்கு இலங்கை கிரிக்கெட் பச்சை கொடி



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் வரவிருக்கும் சுற்றுப்பயணங்களுக்கான தேர்வுகளுக்குத் தயாராக இருப்பதாக இலங்கை கிரிக்கெட்டுக்கு அறிவித்துள்ளார்.

இதனால் இலங்கை கிரிக்கெட் வாரியம், மெத்யூஸை மீண்டும் பயிற்சியில் ஈடுபடவும் எதிர்கால சுற்றுப் பயணங்களுக்கான தேர்வில் இணைத்துக் கொள்ளவும் அனுமதிக்க முடிவு செய்துள்ளது. (4-6)

# 2021 லங்கா பிறீமியர் லீக் போட்டி அட்டவணை வெளியீடு



2021 லங்கா பிரீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டியானது எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் திகதி கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு காலி மற்றும் நடப்பு சம்பியனான யாழ்ப்பாணம் அணிகள் தொடக்க ஆட்டத்தில் மோதவுள்ளன.

தொடரின் முதல் சுற்றின் 20 ஆட்டங்கள் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து இறுதிச் சுற்று ஆட்டங்கள் ஹம்பாந்தோட்டை, சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும்.

லீக்கின் இறுதிப் போட்டிகள் 23 டிசம்பர் 2021 அன்று ஹம்பாந்தோட்டையில் நடைபெறும், அதேநேரம் டிசம்பர் 24 ஆம் திகதி இறுதிப் போட்டிக்கான "ரிசர்வ் டே" ஆக ஒதுக்கப்பட்டுள்ளது.


2021 லங்கா பிரீமியர் லீக் இலங்கை கிரிக்கெட் நடத்தும் நாட்டின் தலைசிறந்த உள்நாட்டுப் போட்டியாகும், சர்வதேச வீரர்களின் பங்கு பற்றலுடன் இம்முறை 24 போட்டிகளைக் கொண்டமைந்துள்ளது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2427

தட்ஷாயணன்




திஷாயினி




தனாதிபன்




டருஜன்




கனிவிழி




அட்சயன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

14.10.2021
புரட்டாதி 28, வியாழக்கிழமை
நவமி முன்னிரவு 10.28 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 1.49 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சந்திராஷ்டமம்-மிருகசீரிடம், திருவாதிரை
ஆயுதபூஜை

வளவன்


**மேஷம்**

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


**ரிஷபம்**

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்லதாக அமையும்.


**மிதுனம்**

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வேலைச்சுமை கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள்.


**கடகம்**

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


**சிம்மம்**

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதிகூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


**கன்னி**

பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.


**துலாம்**

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


**விருச்சிகம்**

உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.


**தனுசு**

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு.


**மகரம்**

வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், பெரியோர்களின் சந்திப்பால் பெருமை காணும் நாள், உடல் நலன் சீராகும், கற்பனை மிகுதியான நாள்.


**கும்பம்**

சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைச்சல்கள் அதிகரிக்கலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.


**மீனம்**

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**நம்பிக்கை இருக்கும் இடத்தில் கீழ்ப்படிதல் இருக்கும்**

# ஒன்லைன் கேம் விளையாட்டால் பாடசாலை மாணவன் விபரீத முடிவு

(கொழும்பு)

களுத்துறை - பண்டாரகம, ரய்கம, குன்கமுவ பிரதேசத்தில் கைப்பேசி விளையாட்டுக்கு அடிமையாகிய பாடசாலை மாணவரொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பண்டாரகம, ரய்கம, குன்கமுவ பிரதேசத்தை சேர்ந்த இருசு அஷேன் என்ற 11 வயதுடைய மாணவன் அவரின் வீட்டில் அமைந்திருந்த கொங்கிரீட் தூண் ஒன்றில் தூக்கிட்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த மாணவனின் பெற்றோர் தெரிவிக்கையில்,

ஒன்லைன் படிப்பிற்காக போன் ஒன்றை வாங்கிக் கொடுத்தேன். பின்னர் ஒன்லைன் படிப்பு நின்று விட்டது. மகன் பின்னர் கேம் விளையாட பழகி விட்டார். அனைத்து பெற்றோரிடம் காலில் விழுந்து வேண்டுகிறேன். பிள்ளைகளுக்கு போன் கொடுக்கவே வேண்டாம் எனவும் கவலை வெளியிட்டுள் ளனர்.

வழமையாக நான் வீட்டுக்கு வந்து மகனை அழைக்கும் போது எங்கிருந்தாலும் அப்பா என குரல் கொடுக்கும் பழக்கத்தை மகன் கொண்டிருந்தார். நான் அறைக்கு சென்று பார்த்தேன் அங்கு மகன் இருக்கவில்லை. பின்னர் சமையல் அறைக்கு சென்று பார்த்த போது, மகன் கொங்கிரீட் தூண் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

மகனை ஹொரனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் மகன் இறந்து விட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன்போது, சிறுவனின் திடீர் மரணம் தொடர்பில் பாணந்துறை குற்றவியல் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் சிறுவன் கைப்பேசி விளையாட்டுக்களுக்கு அடிமையாகியிருந்தமை தெரியவந்துள்ளது. (4-5)


**கம்சப்பிரியா இசைக் கல்லூரி**



இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
(விஜயதசமி நாள் வகுப்பு)
15.10.2021 (வெள்ளிக்கிழமை) மாலை 3.00-6.00 மணிவரை நடைபெறும்
புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
(வயலின், வீணை, புல்லாங்குழல், வாய்ப்பாட்டு, ஹார்மோனியம், கிற்றார், ஓர்கன்)
(6221) ஆசிரியர்

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



அறப்பணிதனிலே ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும்

**யாழ் அறிவுத்திருக்கோவில்**

பேரன்புடையீர்!

மானுடர் தம் நிறைவான வாழ்விற்கு உற்றவையாம்
மன உடல் ஆன்ம நலப் பயிற்சிகள் தனை
தளராது இற்றைவரை நல்கிவரும் அறப்பணியாம்
தனதென்றதில் ஆண்டைந்தை எய்திருக்கும்
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் அதன் மேன்மை
யாமுணர்ந்து பறைசாற்றுவோம் பங்கேற்பீர்

இடம் : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
காலம் : 15.10.2021 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி
தலைமை : மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல்
(தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)
சிறப்புரை : சொல்வேந்தர் சுகி.சிவம் (தமிழ்நாடு)



“மனமும் அறிவும்”

**மகரிஷி மங்கலம்**

இறைவணக்கம்
குருவணக்கம் :அருள்நிதி க.ஜெயராணி
தவம் :அருள்நிதி த.சிவகாமி
வரவேற்புரை :மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி வே. பாஸ்கரன்
(பொருளாளர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
தலைமையுரை :மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல்
(தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)
வாழ்த்துரைகள் :அருள்நிதி த. குழந்தைவேல்
(தலைவர், யாழ்ப்பாண மண்டலம் மற்றும் உபதலைவர்,யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி அ.மதுரைவீரன்
(தலைவர், மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் கொழும்பு மண்டலம்)
முதுநிலைப் பேராசிரியர் அருள்நிதி கெ.ரா.முனிரத்தினம் (தமிழ்நாடு)
சிறப்புரை :சொல்வேந்தர் சுகி. சிவம் அவர்கள் (தமிழ்நாடு)
தலைப்பு- மனமும் அறிவும்
நன்றியுரை :துணைப்பேராசிரியர் அருள்நிதி. த. நந்தகுமரன்
(செயலாளர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

நிகழ்வுகள் யாவும் மெய்நிகர் (ZOOM) ஊடாக நடைபெறும்
என்பதனை அறியத்தருகின்றோம்

ZOOM ID: 950 678 6590
Password: vetha

ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை ஆரம்பமாகி
தினமும் மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை நடைபெறும்
அனைவரையும் அன்புரிமை பாராட்டி வரவேற்கின்றோம்

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண்வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
0212222772, 0777368745, 0714403268
(C-2812)

# இந்தியா அவசரமாகத் தலையிட்டு மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மோடிக்கு அவசர கடிதம்

(கரணவாய்)

இலங்கை மீது இந்தியா அவசரமாக தலையிட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் இந்திய பிரதமர் ஸ்ரீநரேந்திர மோடிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1987 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாகிய, நடைமுறையிலுள்ள மாகாணசபைகள் முறைமையானது இலங்கையால் கடந்த 3 வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமானது தேர்தலை நடத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல் சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளது .

இனப்போரானது முடிவடைந்து பன்னிரண்டு வருடங்களின் பின்னர், தமிழர்கள் தொடர்கின்ற இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு காத்திருக்கிறார்கள்.

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதேசமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதன் பொருட்டு தமிழ் மக்கள் உலகிலுள்ள அதிகாரம் மிகுந்த நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிடம் அழைப்பு விடுக்கின்றனர் .

எமது சொந்த அரசியற் தலை விதியைத் தீர்மானிப்பதன் பொருட்டு பொதுசன வாக்கெடுப்பு ஒன்றினை ஒழுங்கு செய்வதன் மூலமாக ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வொன்றினை அடைவதற்கு உதவுமாறு உலகிலேயே பாரிய ஜனநாயக நாடு என்ற வகையில் இந்தியாவிடம் தமிழர்கள் கோரிக்கை விடுக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைவாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதற்கும் மாகாண சபைகளுக்குரிய தேர்தலை நடத்துவதற்கும், உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கடப்பாடுகள் இலங்கையில் அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் இந்தியாவிடம் கோரி நிற்பதாகவும் தமிழ் மக்களுக்கு எதிரான கடந்த கால வன்முறை வடிவங்கள் மீள- இடம்பெறாமலிருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கவல்ல பொதுசன வாக்கெடுப்பினை ஒருங்கிணைப்பதற்காக உடனடியானதும் அவசரமானதுமான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு இந்தியாவிடம் கோரி நிற்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (7-5-60)

## சனீஸ்வர ஹோமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் புரட்டாதி மாத இறுதிச் சனிக்கிழமை விரதத்தை முன்னிட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு விநாயகப் பெருமானிற்கு அபிஷேகமும் சனீஸ்வரப் பெருமானிற்கு விசேட ஹோமம், பூஜை என்பனவும் நடைபெறவுள்ளன. (7-5)

## வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை விஜயதசமியன்று காலை 9 மணி முதல் தேவஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகனால் வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும். வித்தியாரம்பம் செய்ய விரும்பும் அடியவர்கள் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பதிவிலக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம்எனவும்அன்றைய தினம் தேவையான பொருட்களுடன் சுகாதார ஒழுங்கு விதிப்படி பங்கு கொள்ளுமாறும் ஆலய நிர்வாகசபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5)

# விதை உற்பத்திக்காகவே 10 அந்தர் இரசாயன உரம் வழங்கப்பட்டுள்ளது

## மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்

(கண்டாவளை)

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் இருந்து விதை உற்பத்திக்காகவே சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 10 அந்தர் இரசாயன உரம் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தேவரதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டு நில செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான மானிய உரத்தை வழங்காது கமநல சேவை நிலையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உரத்தினை அரச திணைக்களங்கள் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றிற்கு வழங்கப்பட்டு வருவதாக விவசாயிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் இருந்து விதை உற்பத்திக்காகவே சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 10 அந்தர் இரசாயன உரம் வழங்கப்பட்டுள்ளது

கடந்த போகத்தில் வழங்குவதற்கு களஞ்சியப்படுத்தப்பட்ட மிகுதியாக இருந்த உரமே இவ்வாறு வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். (7-5-315)



பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் முன்பள்ளிகளுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வேலணை தெற்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம், கட்சியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் சட்ட ஆலோசகர் கனகரத்தினம் சுகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:- ரவிசாந்)

# மழையுடனான காலநிலை அதிகரிக்கும் சாத்தியம்

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் மழையுடனான காலநிலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாகத் திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இதுவரையான மழைவீழ்ச்சி நிலவரப்படி அதிகூடிய மழைவீழ்ச்சியாக யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறையில் 200.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மேலும் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 900.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (7-5-18)

# நாவல் மரக்குற்றிகள் பொலிஸாரால் மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் பிரதேசத்தில் கனரக வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 57 நாவல் மரக் குற்றிகளை நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியதுடன் வாகனத்துடன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலைய புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். (7-5-30)

# உவர்நீர்த் தடுப்பணைகளை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த காலத்திலும் ஆழிப் பேரலை அனர்த்தத்தினாலும் சேதமடைந்துள்ள உவர்நீர்த் தடுப்பணைகளை புனரமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளிலும் நந்திக் கடல் சூழவுள்ள சுமார் 20 கிலோமீற்றர் வரையான நீளமான பகுதிகளிலும் நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிபோன்ற பகுதிகளிலும் காணப்பட்ட உவர் நீர்த்தடுப்பணைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் உள்ளன.

இதனால் உவர்நீர் உட்புகுந்து பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருகின்றன.

எனவே பயிர்ச்செய்கை நிலங்களைப் பாதுகாக்கும் வகையில் சேதமடைந்த உவர்நீர்த் தடுப்பணைகளைப் புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். (7-5-315)

# வியாபாரிகளின் செயற்பாடுகளினாலேயே அரசாங்கம் கொள்கைகளை மாற்றியுள்ளது

## வர்த்தக அமைச்சர்

(கொழும்பு)

**நாட்டின் அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி கொள்கைகளை வகுத்தாலும்கூட, வியாபாரிகளின் செயற்பாடுகள் காரணமாக கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டியுள்ளதாகவும் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது நெருக்கடி நிலையொன்று உள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு இல்லை ஆனால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விலை குறைப்பை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சித்த சகல நேரங்களிலும் அரசாங்கத்தை விமர்சிக்கும், அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

இன்றும் அவ்வாறான நிலையே உள்ளது. விலை தீர்மானம், வர்த்தமானி அறிவித்தல் விடுதல் உள்ளிட்ட சகல அதிகாரமும் நுகர்வோர் அதிகார சபையின் கடமையாகும். அமைச்சராக என்னால் இதில் ஒன்றுமே செய்ய முடித்த நிலை உள்ளது.

இறக்குமதியை நிறுத்தும், வேலைத் திட்டத்தை முன்னெடுக்க ஜனாதிபதி முயற்சித்த வேளையில் அதற்கு எதிராக வியாபாரிகள் போர்க்கொடி தூக்குகின்றனர். இது நாட்டில் நெருக்கடி நிலைமைகளை உருவாக்குகின்றது. ஒரே நேரத்தில் சகல இறக்குமதிகளையும் எம்மால் நிறுத்த முடியாது, ஆகவே அத்தியாவசிய பொருட்களை நாம் இறக்குமதி செய்தே ஆக வேண்டியுள்ளது.

குறிப்பாக அரிசி நெருக்கடி தீரும் வரையில் நாம் அரிசி இறக்குமதி செய்வோம்.

உலக சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டுள்ள நிலையில் எம்மால் குறைந்த விலையில் எரிபொருள் வழங்கினால் ஒரு கட்டத்துடன் எம்மால் தாக்கு பிடிக்க முடியாத நிலையொன்று உருவாகும், சலுகைகளை கொடுத்துக்கொண்டே இருந்தால் ஒரு கட்டத்தில் பொருளாதாரம் வெடித்து சிதறிவிடும்.

அவ்வாறான நிலைமைய நோக்கி இலங்கை பயணித்துக்கொண்டுள்ளது. ஒரு சில சந்தர்ப்பங்களில் எம்மால் விலையை நிர்ணயிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (4-5)


## தவறிவிட்டது

இளையதம்பி கதிர்காமத்தம்பி ஆகிய எனது 500645709V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று யாழ்ப்பாணம் தபாற்கந்தோருக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் இடையில் 13.10.2021 நேற்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**076 636 7039** (8239)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர். சண்முகம் சின்னையா

திதி:14.10.2021

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 11 | 14 |
| 01 | 09 |
| 1944 | 2021 |



அன்புடனும் பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து
எங்கள் இதயங்கள் உங்களின்
நீங்காத நினைவலைகளை சுமந்தபடி
ஆலமரம் சாய்ந்தது போல் ஆனதையா உம் பிரிவு
அன்பின் திருவுருவே, பாசத்தின் இருப்பிடமே
அன்பின் கணவனாய், அரவணைக்கும் தந்தையாய்
அன்பான மாமாவாய், பாசமான பேரனாய், பாட்டனாய்
எம் வாழ்வு மலர்வதற்கு
வழிகாட்டியாய் நின்றவர் நீர்
உங்கள் ஆத்மா இறைவனடி சேர
கலங்கும் விழிகளுடன் கைகூப்பி வணங்குகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணாசிலையடி,
கரணவாய்.

(C-2818)

தகவல்:
குடும்பத்தினர்



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



எமையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு கடந்த 14.09.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் தனபாலசிங்கம் இலங்கைநாயகி

(திதி: பூர்வபட்ச அட்டமி)

**எமது குடும்பத் தலைவி மறைவையொட்டி நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி, முகப்புத்தகம், மின்னஞ்சல் போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் பதாகைகள் அச்சிட்டு அஞ்சலி செலுத்திய நண்பர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல நிகழ்விலும் எம்முடன் கைகோர்த்து இன்று வரை எமக்கு சகல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

இன்று நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளுக்கு சுகாதார நடைமுறைகளுக்கமைய எம் உறவுகளை அழைக்க முடியாது போனமைக்கு மிகவும் வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

352, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8230)

021 222 6895

இங்ஙனம்
குடும்பத்தினர்

பாரதம் / வெளிநாடு

# ஆப்கானில் ஐ.எஸ்.கே. பயங்கரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் 17 சதவீத மாவட்டங்கள்

## ஆய்வு மதிப்பீடு

**(காபூல்) அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையே ஏற்படவிருந்த அரசியல் உடன்பாடு நோக்கி உலகின் கவனம் திரும்பிய நிலையில், தனது பலத்தைப் பெருக்கிக் கொண்டது ஐ.எஸ்.கே.**

இப்போது ஆப்கானிஸ்தானின் 17 சதவீத மாவட்டங்கள் ஐ.எஸ்.கே. கட்டுப்பாட்டில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.கே. அமைப்பு குண்டுஸில் உள்ள மசூதியில் அண்மையில் நடந்த தற் கொலைப் படைத் தாக்குதலில் சுமார் 50 பேர் உயிரிழந் தனர்.

அதேபோல இந்த அமைப்பு தான் ஓகஸ்ட் மாதம் உலக நாடுகள் பல ஆப்கானிஸ்தானை விட்டு அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்த நிலையில், காபூல் விமான நிலையத்தில் மோசமான தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தியது.

ஆப்கான்- பாகிஸ்தான் எல்லையில் உள்ள நங்கர்கர் மாகாணத்தைத் தளமாகக் கொண்டு இந்த அமைப்பு செயற்பட்டு வருகிறது.

தொடங்கப்பட்ட குறுகிய காலத்திலேயே ஆப்கானிஸ்தானின் வடக்கு, வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஊரக மாவட்டங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தியதன் மூலம் உலகின் முதல் நான்கு கொடூர மான பயங்கரவாத இயக்கங் களில் ஒன்றாக ஐ.எஸ்.கே. மாறியது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படையினர் முழுமையாக வெளியேறிய ஒக ஸ்ட் இறுதி நிலவரப்படி ஐ.எஸ். கேயில் சுமார் 2,000 பேர் இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (7-5)

# கொரோனாவினால் வறுமைக்கு தள்ளப்பட்ட 10 கோடி பேர்

## ஐ.நா. பொதுச்செயலாளர்

(ஜெனிவா)

கொரோனாவால் 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என ஐ.நா.சபை பொதுச் செயலாளர் ஆண்டனியோ குட்டேரஸ் வேதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐ.நா. சபை பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்டேரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

400 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு சமூக ஆதரவு குறைவாக உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், போதுமான சுகாதார பராமரிப்பு இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும், அவசரமாக தேவைப்படும்போது வருமான பாதுகாப்பு இல்லை என்றும் கூறினார்.

உலகம் 5 முதல் 6 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் பொருளாதார மீட்பின் மத்தியில் இருந்தாலும்கூட, வளர்ந்து வரும் நாடுகள் பலவும் பின்தங்கியுள்ளதாக கூறியுள்ள அவர், வலுவான பொருளாதார நாடுகள் மீட்புக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28 சதவீத அளவுக்கு மீட்பு திட்டங்களில் முதலீடு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வளர்ந்த நாடுகள் கொரோனா தடுப்பூசியை பெற்றிருந்தாலும் ஏழை நாடுகளுக்கு போதுமான தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை என ஐ.நா. சபை பொதுச்செயலாளர் குற்றம் சாட்டியுள்ளார். (7-5)

# ஈராக் பாராளுமன்ற தேர்தலில் அல்-சதரின் இயக்கம் வெற்றி

(பக்தாத்)

திட்டமிட்டதைவிட ஓராண்டுக்கு முன்னரே நடத்தப்பட்ட ஈராக், பாராளுமன்ற தேர்தலில் சேரோன் இயக்கம் வெற்றி பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொத்தமுள்ள 329 பாராளுமன்ற இடங்களில் இஸ்லாமிய மதகுரு மூக்ததா அல்-சதரின் சேரோன் இயக்கம் 73 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சன்னி இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த முகமது அல்-கல்போசியின் 'தக்கதூம்' கூட்டணி இதுவரை 38 இடங்களில் வென்று இரண்டாம் இடத்தில் உள்ளது.

ஈரானுக்கு ஆதரவான பஃடா கூட்டணி வெறும் 14 இடங்கள் மட்டுமே வென்று பின்னடைவைச் சந்தித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் வெறும் 41 சதவீத வாக்காளர்களே வாக்களித்தனர் என அதிகார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதப் பிரிவுகள் மற்றும் இன அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு என்பது உண்மையில் நடக்காது என்ற ஈராக்கியர்களின் நம்பிக்கையின்மையே பெரும்பாலானவர்கள் தேர்தலில் வாக்களிக்காமல் போனதற்கு காரணமாகப் பார்க்கப்படுகிறது. (7-5)

# பல்லுயிர் பாதுகாப்புக்கு சீனா ரூ.1700 கோடி நிதி

## சீன ஜனாதிபதி அறிவிப்பு



(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜின்பிங், வளரும் நாடுகளில் பல்லுயிர் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளுக்கு ரூ.1700 கோடி நிதி வழங்குவதாக ஐ.நா. கூட்டத்தில் அறிவித்தார். உயிரியல் பன்முகத்தன்மை குறித்து ஐ.நாவின் 15 ஆவது தலைவர்கள் உச்சி மாநாடு நடந்து வருகிறது.

இதில் சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் வீடியோ கான்பரன்ஸ் மூலம் பங்கேற்று பேசியதாவது,


வளரும் நாடுகளில் பல்லுயிர் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சீன அரசு தனது பங்களிப்பாக ரூ.1700 கோடியை முதலீடு செய்கிறது என்பதை இங்கு அறிவித்துக் கொள்கிறேன். இதேபோல மற்ற நாடுகளும் பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும். புதிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு இலக்குகள், ஆர்வம் கொண்டவைகளாக நிர்ணயிக்கப்பட வேண்டிய அதே சமயத்தில் அவை நடைமுறைப்படுத்தும் விதமாகவும், சமநிலை கொண்டதாகவும் இருக்க வேண்டும். என அவர் கூறினார். (7-5)

# 40 ஆயிரம் ஆப்கான் அகதிகளுக்கு புகலிடம் வழங்கும் கனடா

(ரொரண்டோ)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் அலை அலையாக அந்நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடே தனது டுவிட்டர் பக்கத்தில் கனடா 40,000 ஆப்கான் அகதிகளை வரவேற்கிறது எனவும் அகதிகளைப் பாதுகாப்பாக மீளக் குடியமர்த்துவதற்கு நங்கள் ஆதரவை அதிகரிக்குமாறு மற்றவர்களை நாங்கள் வலியுறுத்துகிறோம் எனவும் பதிவிட்டுள்ளார்.



மேலும் ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான உதவியை அனுகுவதை உறுதி செய்ய நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம் என பிரதமர் தொடர்ந்து டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (7-5)

# ஒக்டோபர் மாதம் இந்து பாரம்பரிய மாதமாக அறிவிப்பு

## கரோலினா ஆளுநர் அறிவிப்பு

(வடக்கு கரோலினா)

ஒக்டோபர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாக அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிவிப்பு,

இந்து மதம் உலகின் மூன்றாவது பெரிய மதமாகும். எங்களுடைய துடிப்பான இந்து அமெரிக்க சமூகம், வடக்கு கரோலினா மாகாண குடிமக்களின் வாழ்க்கையை வளப்படுத்தி பெரும் பங்களிப்பு செய்துள்ளது.

இதன்மூலம் நடப்பு ஒக்டோபர் மாதத்தை, வடக்கு கரோலினா மாகாணத்தில் "இந்து பாரம்பரிய மாதமாக" அனைத்துக் குடிமக்களும் பின்பற்றுமாறு அறிவிக்கிறேன். இவ்வாறு ஆளுநர் ராய் கூப்பர் தெரிவித்துள்ளார். (7-5)

# பயங்கரவாத தடைச்சட்டத்தினால் ஒருவரின் வாழ்வை சிதைக்கவும், பறிக்கவும், அழிக்கவும் முடியும்

## அருட் தந்தை சத்திவேல்

(நெளுக்குளம்)
குற்றமற்றவர்களையும் சிறைக்குள் தள்ளி குற்றவாளியாக்கவும், குற்றம் சுமத்தாது வருடக் கணக்காகத் தடுத்து வைக்கவும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு முடியும் என்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதியினுடைய விடுதலையைப் பார்க்கலாம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத தடைச் சட்டத்தினால் ஒருவரின் வாழ்வை சிதைக்கவும், பறிக்கவும், அழிக்கவும் ஏன் கொலை செய்யவும் முடியும் என்பதற்கு இன்னுமொரு உதாரணமே சில நாட்களுக்கு முன்னர் விடுதலை பெற்ற அரசியல் கைதியான கதிரவேற்பிள்ளை கபிலனின் கைதும் 12 வருட சிறை வாழ்வும் நீதி என்பது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு தூரமாக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இதனாலேயே தசாப்தங்கள் கடந்தும் அரசியல் கைதிகள் சிறைக்குள் எதிர்காலம் தெரியாமல் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல சிறையில் உள்ள அரசியல் கைதிகள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நோயினால் பாதிக்கப்பட்டு உளரீதியான பாதிப்போடு எதிர்காலம் தெரியாது வாழ்வதாக அண்மையில் விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் குறிப்பிட்டனர்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவை வருடாந்த திருவிழாவைக் கைவிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்திற்கு இடமளிக்காது முழுவதுமாக அகற்றி அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழிவகுக்க வேண்டும்.


அரசியல் கைது களையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதோடு இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கும், தொடரும் இன அழிப்பிற்கும் சர்வதேச நீதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் இலங்கையில் இடம் பெற்றது இன அழிப்பென ஏற்று அரசியல் நீதியை உறுதிப் படுத்த அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (7-5-299)

## ஷெல்கள் மீட்பு

(தருபுரம்)
தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் தம்பிராசபுரம் பகுதியில் மண்ணில் புதையுண்ட நிலையில் இரண்டு எறிகனை ஷெல்கள் இனங்காணப்பட்டது.

தருமபுர பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நேற்றைய தினம் நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (7-5-316)

## திடீரென தீப்பற்றி எரிந்த பட்டா ரக வாகனம்




(மன்னார்)
மன்னார் அரிப்பு பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொருட்களை விநியோகித்து விட்டு மீண்டும் வவுனியா நோக்கிப் பயணித்த பட்டா ரக வாகனம் அரிப்பு பகுதியில் திடீரென தீப்பற்றி உள்ளது.

இதன் காரணமாக குறித்த பட்டா ரக வாகனம் முழுமையாக எரிந்துள்ளது.

எனினும் குறித்த வாகனத்தில் பயணித்த இருவர் எவ்வித காயங்களும் இன்றி தப்பியுள்ளனர். மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-5-285)

## முகமாலைப் பகுதியில் அதிகரிக்கும் சட்டவிரோத மணல் அகழ்வு

### மக்கள் விசனம்



(முறிகண்டி)
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் மக்கள் விசனம் வெளியிடுகின்றனர்.

அண்மைய நாட்களாக முகமாலை வடக்குப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. வாய்க்கால்களில் மண் அகழப்பட்டு தூர்சும் உடைக்கப்படுகிறது.

இதனால் வெள்ள நீர் வழிந்து ஓட முடியாது காணப்படுவதுடன், கிராமங்களில் வெள்ளப் பாதிப்பும் ஏற்பட வாய்ப்புள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (7-5-100)

## ரவிகரன், சிவாஜிலிங்கம் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)
கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியினை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கோட்டாபய கடற்படை முகாமிற்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக வழக்குத்தொடரப்பட்டது.

இவ் வழக்கானது கடந்த மூன்றுவருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவருகின்றது.

இந்நிலையில், நேற்றைய தினம் தவணையிடப்பட்டிருந்த குறித்த வழக்கின் விசாரணைகள் தற்போதைய கொவிட் -19 அசாதாரண நிலையினைக் கருத்திற் கொண்டு , எதிர்வரும் 2022 பெப்ரவரி மாதம் 08ஆம் திகதிக்கு தவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-5-281)



பாரம்பரிய நெற் செய்கை மற்றும் இயற்கை முறையிலான நெற் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோவின்) அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு தொகுதி பாரம்பரிய நெல் இன விதைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்-ஜோசப்நயன்)

## வவுனியாவில் ஏற்பட்ட விபத்தினால் ஓமந்தை பகுதிக்கு மின்தடை

(நெளுக்குளம்)
வவுனியாவில் ஏ-9 வீதியில் மாணிக்க வளவு சந்திப்பகுதியில் இடம்பெற்ற விபத்தினால் ஓமந்தை பகுதிக்கான மின் தடைப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கன்டர் ரக வாகனம் மின் கம்பமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.


இதன்போது சாரதிக்கு சிறு காயம் ஏற்பட்டதுடன் வாகனம் சேதமடைந்தது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் வவுனியா ஓமந்தை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை குறித்த



விபத்தினால் மின் கம்பம் உடைந்து வீழ்ந்து ஓமந்தை பகுதியின் சில கிராமங்களுக்கான மின்சாரம் அதிகாலை 3 மணி முதல் தடைப்பட்டது. (7-5-299)

# நாடு திரும்பினார் பாடகி ஜொஹானி



(கொழும்பு)

சுமார் இரண்டு வார காலப்பகுதியில் இந்தியாவில் நடந்த பல இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட ஜொஹானி டி சில்வா நாடு திரும்பியுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் இரவு மும்பையிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். இலங்கை வந்தடைந்த அவருக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய விஜயம் குறித்து விமான நிலையத்தில் கருத்து தெரிவித்த அவர்,

இந்திய மக்கள் இலங்கையைப் பற்றி அறிந்திருந்தாலும் சிங்கள மொழி இருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் கேட்காத மொழியில் நான் ஒரு பாடலைப் பாடினேன், அது இந்தியாவிலும் உலகெங்கிலும் மிகவும் பிரபலமாக இருந்தது என்று கூறினார். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### நன்மைகளை வாரி வழங்கும் நவராத்திரி 8 ஆம் நாள்



அன்று விசேஷமாக சுகியன், வடை, பாயாசம் செய்ய வேண்டும். சமையலில் பருப்பு, மோர்க் குழம்பு, பச்சடி, கறி வகை, பருப்பு செய்யலாம்.

அன்று மாலை கொண்டைக் கடலை, சுண்டல் நைவேத்தியம் செய்து ஆரத்தி எடுக்க வேண்டும். சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு டன் சீப்பு, கண்ணாடி, குங்குமச் சிமிழ் கொடுத்தால் விசேஷம்.

சரஸ்வதி பூஜையின் மறுநாள் விஜயதசமியன்று புனர்பூஜை செய்து பூஜையில் வைத்துள்ள புத்தகத்தை எடுத்து வாசிக்க வேண்டும்.

பாட்டு, நடனம் கற்றுக் கொண்டு இருப்பவர்கள் குருவிற்கு தட்சணை கொடுக்க வேண்டும்.

அன்று மாலை கொலுவிற்கு ஆரத்தி எடுத்து ஆரத்தியை இறக்கி கீழே வைக்க வேண்டும். பாலில் சிறிது சர்க்கரை சேர்த்து நைவேத் தியம் செய்ய வேண்டும். மேல் தட்டில் உள்ள மரப்பாச்சி இன்னும் சில பொம்மைகளை படுக்க வைத்து விட வேண்டும்.

இப்படி செய்தால் பூஜை முடிந்த தற்கு அடையாளமாக கருதப்படும். மறுநாள் பொம்மைகளை பெட்டியில், அடுக்கி வைத்து விடலாம்.

நவராத்திரி விரதத்தை கடைப் பிடிப்போர் இப்பிறவியிலும், மறு பிறவியிலும் நற்பயனை பெறுவர். அவர்களுக்கு அரச யோகம் கிடைக்கும். வறுமை நீங்கி செல்வம் கொழிக்கும்.

ஸ்ரீ துர்கா காயத்ரி

# செய்தித்துளிகள்

## நாய்களை கொன்று இறைச்சியாக்கிய தம்பதியினர் கைது

(கொழும்பு)

பாணந்துறை - வாத்துவ பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நாய்களை கடத்தி கொன்று தின்றதாக கூறப்படும் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தம்பதியினர் தெருநாய்களை பிடித்து, கொன்று இறைச்சியாக்கியதாக அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது குறித்து பொலிஸ் அவசர பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (4-5)

## தனிமைப்படுத்தல் உத்தரவை மீறிய 55 பேர் கைது

(கொழும்பு)



சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப்பகுதியில் 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2020 ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக மொத்தம் 80,709 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 140 | 150 |
| தக்காளி | 120 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 160 | 130 | 150 | 140 |
| கரட் | 100 | 130 | 200 | 200 |
| பூசணி | 60 | 70 | 60 | 60 |
| புடோல் | 120 | 130 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 160 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 | 280 | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 300 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 280 | 280 | 240 |
| போஞ்சி | 300 | 350 | 350 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 130 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-70 | 50-70 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 250 | -- | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 70 | -- | 120 |

# பொருளாதாரப் பிரச்சினைக்கான

# ஒரே தீர்வு பட்ஜெட் மட்டுமே

## பாராளுமன்ற உறுப்பினர் டிலான்

**(கொழும்பு)**

**அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை எமது அரசாங்கம் அல்ல எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் கட்டுப்படுத்த முடியாது. மக்கள் எதிர்க்கொண்டுள்ள இப் பிரச்சினைக்கு வரவு-செலவு திட்டத்தின் ஊடாக தீர்வு கிடைக்கப் பெறும் என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்தும் சரி என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக நான் செயற்படவில்லை.

இருப்பினும் கொவிட் தாக்கத்தினால் பூகோள மட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மக்கள் எதிர்க் கொண்டுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் எனத் தெரிவித்தார். (4-5)

# சமையல் எரிவாயு விலையில் சாதனை புரிந்த இலங்கை

(கொழும்பு)

தெற்காசியாவிலுள்ள எந்த நாடுகளிலும் இல்லாத அளவுக்கு உள்நாட்டு எரிவாயு சிலிண்டர் விலை இலங்கையிலேயே அதிகமாக உள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

புள்ளி விவரங்களுக்கமைய, உலகச் சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும், இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பூட்டான் போன்ற தெற்காசிய நாடுகளின் விலைகள் இலங்கையை விட குறைவாக உள்ளன.

தற் போது இந்தியாவில் 14.2 கிலோகிராம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை 884 இந்திய ரூபாயாகும்.

அதன் இலங்கை பெறுமதி 2,352.77 ரூபாயாகும்.லக்னோ நகரில் எரிவாயு சிலிண்டர் விலை 922.50 இந்திய ரூபாயாகும்.

அதன் இலங்கை பெறுமதி 2,453.85 ரூபாய் ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

## ராகலை தீ விபத்து சம்பவம்

# கைதான மகனுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஐந்து உயிர்களைக் காவுக் கொண்ட ராகலை முதலாம் பிரிவு தீவிபத்து சம்பவம் தொடர்பாக ராகலை பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வந்த ஒருவரை இம்மாதம் 25 ஆம் திகதி வரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ராகலை பொலிஸார் உட்பட மேலும் பல பொலிஸ் குழுக்கள் கடந்த நான்கு நாட்களாக விசாரணையில் ஈடுபட்டு வந்திருந்தன.

இதன்போது, சம்பவத்தில் உயிர் தப்பியிருந்த மகனான தங்கையா இரவீந்திரனை ராகலை பொலிஸார், கடந்த இரண்டு தினங்களாக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்துவந்தனர்.

இரவீந்திரன் சம்பவம் இடம் பெற்ற தினத்தில் ராகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வாங்கியதாகவும்,

வீடு தீப்பற்றி எரிந்த போது அணைக்க வந்த மக்களிடம் வீட்டில் யாரும் இல்லை எனப் பொய் சொல்லியதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைத்திருந்த அவரை நேற்று முன் தினம் பகல் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த விபத்து சம்பவத்தில் வீட்டில் வசித்து வந்த தங்கையாயாவின் மகனான இரவீந்திரன் மது போதையில் வீட்டுக்கு வெளியே இருந்த நிலையில் உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# இன்று ஒரு தகவல்

## வழிகாட்டிகள்

நாம் எத்தனையோ நண்பர்களை அறிந்து வைத்திருக்கிறோம்.அவர்களுள் குறிப்பாக எவரையேனும் கண்டு நீங்கள் வியந்திருக்கக்கூடும்.

என்ன இருந்தாலும் பழனியைப்போன்ற ஒரு பண்பாளரைக் காணமுடியுமா? முருகனைப் போன்ற உழைப்பாளியைக் நாம் பார்த்ததே இல்லை! குமரனைப் போன்ற துணிச்சலான மனிதனைக் காண்பது அரிது! கந்தனுக்கு இருக்கும் பெரும்தன்மை யாருக்கு வரும்? வேலனுக்கு இருக்கும் சிக்கனக்குணம்– ஆகா! எவ்வளவோ சேருமே! இன்று இப்படி எல்லாம் அவர்களை வாயாறப் பாராட்டா விட்டாலும் உள்ளுர எண்ணி வியந்து கொண்டாவது இருப்பீர்கள்.

நான் மேலே கொடுத்துள்ள பெயர்கள் எல்லாம் வெறும் உதாரணங்களே. ஆனால் இந்தப் பெயர்களை எல்லாம் நீக்கி விட்டு அந்த இடங்களில் உங்களுக்குத் தெரிந்தவர்களின் பெயர்களை நிரப்புங்கள்.

இப்படியாக மனித இனத்தின் மகத்துவங்களுக்கு உதாரணங்களாக உங்களுள் சிலர் நிச்சயமாக இருப்பார்கள்.

பிரச்சனைகளை அணுகும் போதும், வாழ்க்கையில் முன்னேற விரும்பும் போதும் உங்களுக்குத் தெரிந்த அந்த உதாரண புருசர்களை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்களாக இருந்தால் இந்நேரம் என்ன செய்திருப்பார்கள் என்பதை அடிக்கடி எண்ணிப்பாருங்கள்.

நான் புத்தரைப் போலவோ, காந்தியைப் போலவோ வாழச் சொல்லவில்லை.

உங்களோடு , உங்கள் கண் எதிரிலே நடமாடிக் கொண்டிருக்கும் மனிதர்களைத் தான் பின்பற்றச் சொல்கிறேன்.

இத்தகைய நடைமுறையில் இன்னுமோர் அனுகூலமும் இருக்கின்றது. அவர்கள் எப்படி செயற்படுகிறார்கள், பிரச்சனைகளை எப்படி அணுகிறார்கள், அவர்களால் எப்படி அவ்வாறு இருக்க முடிகின்றது என்பவற்றையெல்லாம் நீங்கள் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அப்படி இருக்கையில் அவர்களுடைய சிறப்புக்களுள் ஒன்டிரண்டையேனும் நீங்கள் பெற முடியாமலா போய் விடும்? நிச்சயம் முடியும். பஞ்சாமிர்தம் ஒரு இனிய கலவை. அந்த இனிய கலவைக்கு எத்தனையோ பொருட்கள் தேவைப்படுகின்றன.

அந்த மூலப் பொருட்கள் எங்கெங்கோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி பக்குவப்படுத்தும் போது ஆகா என்னமாய் இனிக்கின்றது!

அதே போல் உங்களுக்கு தெரிந்தவர்களிடையே எத்தனையோ சிறப்பியல்புகளைக் காண்கின்றீர்கள். அவற்றையெல்லாம் திரட்டுங்கள். உரிய விதத்தில் பக்குவப்படுத்தி பயன்படுத்துங்கள். வாழ்க்கை இனிக்கிறதா? இல்லையா? பாருங்கள்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## வீரச்செயல்!

அதை வேடிக்கை பார்க்கத்தான் எல்லோரும் சென்று கொண்டிருக்கின்றனர்" என்றான்.

தான் வைத்த சோதனையின் முதல் பகுதியை செய்து விட்டான். இதிலிருந்து அவன் எப்படி தப்பிக்கப் போகிறான்? அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது.


என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க அவரும் அருகே சென்றார். கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்றிருந்தான்.

"இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன். இப்படி யாரும் இதுவரை செய்தது இல்லை"என்று கத்திக் கொண்டிருந்தான்.

அவன் குதிப்பதை வேடிக்கை பார்க்க நகர மக்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தனர்.

"நான் ஒன்று, இரண்டு என்று பத்து வரை எண்ணப் போகிறேன். பத்து என்று சொன்னதும், கீழே குதிக்கப் போகிறேன்.

நான் பேச்சு தவற மாட்டேன். என் வீரச் செயலைப் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்ற அவன் ஒன்று, இரண்டு என்று எண்ணத் தொடங்கினான்.



என்ன நடக்கப் போகிறதோ என்று ஆர்வத்துடன் மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒன்று, இரண்டு என்று எண்ணிக் கொண்டிருந்தான் மந்திரி. அவன் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடின. தான் தேடியவன் வந்திருப்பதை அறிந்து, தொடர்ந்து எண்ணத் தொடங்கினான்.

அவன் ஒன்பது என்று எண்ணினான். கூட்டத்திலிருந்து ஒரு குரல், "எண்ணுவதை நிறுத்தி விட்டுக் கீழே வாருங்கள்" என்று கேட்டது.

யார் குரல் கொடுத்தது என்று எல்லோரும் பார்த்தனர். அங்கே மந்திரியின் மகன் கையில் ஒரு பாத்திரத்துடன் நின்றிருந்தான்.

உரத்த குரலில் அவன், "தந்தையே! உங்களுக்கு மிகவும் பிடித்தமான பணியாரம், அம்மா ஆசையாக உங்களுக்காகச் செய்தது.

(தொடரும்)

# மகாபாரதம்

**213**



மேலும் எலி தொடர்ந்தது "நண்பரே! உபசார வார்த்தைகளால் பயனில்லை.

நெடுந்தொலைவில் இருந்தாலும் உம்மைக் கண்டு நான் அஞ்சுகிறேன். சுயநலமின்றி எந்தக் காரியமும் இல்லை.

புத்தியுள்ளவன் எல்லாப் பொருள்களை இழந்தேனும் தன் உயிரை காப்பாற்றிக் கொள்வான்.

என்னதான் பகைவன் அன்பு உள்ளத்தோடு பழகினாலும் அவனை சந்தேகக் கண்கொண்டே காண வேண்டும்.

பூனை எவ்வளவோ பேசியது. ஆனாலும் எலி ஏமாறவில்லை பூனையை நோக்கிக் கூறியது. "நம்பத் தகாதவனை நம்பக் கூடாது.

நம்பத் தகுந்தவனையும் அதிகம் நம்பக் கூடாது. அதே நேரத்தில் தன் மீது நம்பிக்கை உண்டாகும் படி செய்ய வேண்டும். பூனை யாரே! உம் போன்ற பகைவரிடமிருந்து எப்போதும் நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

நீங்களும் உங்களை பிடிக்க பொறி வைப்பவரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" இவ்வாறு பலம் இல்லாததாயினும் அறிவுள்ள ஒரு எலி மிக்க பலமுள்ள பகைவர்களைச் சாமர்த்தியமாக வென்றது.

எனவே தருமா, பலமுள்ள பகைவனாயினும் அவனுடன் சில சமயம் சமாதானம் செய்து கொண்டு வெற்றி காண வேண்டும்.

ஒன்றொடொன்று பகையுள்ள எலியும், பூனையும் சங்கடமான நேரத்தில் நட்புக் கொண்டன. அதே நேரத்தில் அவை குரோதத்துடன் இருந்தன. அவற்றில் அறிவிற் சிறந்தது வென்றது.

அதுபோலவே அறிவு மிக்கவனும் விழிப்புடன் இல்லையெனில், அறிவு குறைந்தவனால் வெல்லப்படுவான். பயம் அற்றவன் போல தோற்றமளிக்க வேண்டும்.

ஆனால் பயம் உள்ளவனாக அஞ்சி நடக்க வேண்டும். நம்பிக்கை உள்ளவன் போல இருக்க வேண்டும். ஆனால் நம்பிக்கை இல்லாதவனாகவும் இருக்க வேண்டும். அதாவது எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையேல் ஆபத்து நேரிடும்" என்றார் பீஷ்மர்.

(தொடரும்)

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்;
இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா
திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.

*– அலன் தார்ன்ஹில்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வடக்கின் புதிய ஆளுநர் அறிய வேண்டிய புராணம்

இந்து சமயத்தில் யாகம் என்பது மிகவும் முக்கியமானது.

அவிப்பாகங்களை இறைவனுக்கு வழங்கும்பொருட்டு நடத்தப்படுகின்ற யாகத்துக்கு முழுமுதற் கடவுளாகிய சிவன் மற்றும் பிரணப் பொருளாய் அமைந்த விநாயகன், முருகன் உட்பட ஏனைய பரிவார மூர்த்திகள் மற்றும் தேவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவது யாக மரபு.

இதில் முழுமுதற் கடவுளுக்கான அழைப்பு என்பது மிகவும் முக்கியமானது. முழுமுதற் கடவுளுக்கு உரிய மதிப்பு வழங்காமல், ஏனைய பரிவாரங்களுக்கு முன்னுரிமை வழங்க நினைத்தால், அவ்வளவுதான். யாகத்தின் பயன் எதிர்விளைவைத் தரும்.

எனவே யாகத்துக்கான அழைப்பு என்பது பதவி நிலைப்பட்டு ஒழுங்குமுறையில் அமைய வேண்டும்.

ஒருமுறை தக்கன் செய்த யாகத்துக்கு பரிவாரமூர்த்திகள் மற்றும் முப்பத்துமுக்கோடி தேவர்கள், ரிஷிகள் என அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் சிவனுக்கு அவன் அழைப்பு விடாமல் யாகம் செய்தான்.

இதனால் கோபமடைந்த சிவன் தக்கனின் யாகத்தை அழித்து அவனுக்குத் தக்க பாடம் புகட்டினார் என்பது புராணக் கதை.

இங்கு சிவனுக்கு அழைப்பு விடுத்து ஏனையவர்களைப் புறந்தள்ளியிருந்தால் கூட, தக்கனின் யாகம் தக்கபடி நடந்தாகியிருக்கும்.

எனவே தக்கனின் யாகம் குழம்பியதற்கு அவனின் கர்வமே காரணமாயிற்று.

இங்கு புராணம் கூறும் தக்கனின் யாகக் கதைக்குள் ஒரு நிர்வாகத்தின் ஒழுங்கு முறைமை வெளிப்படுத்தப்படுவதை உணர்ந்து கொள்ளலாம்.

ஆக, பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் தங்கள் பதவிக்காலம் முழுவதும் யாகம் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

அவர்கள் செய்கின்ற யாகத்தில் அவிப்பாகங்களும் அதற்கான அழைப்புகளும் சரியாக அமையாதவிடத்து, யாகம் கலைந்து அதனைச் செய்தவர் இடம்மாற வேண்டி வரும்.

அந்த வகையில் வடக்கின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள ஜீவன் தியாகராஜா அவர்கள் தக்கன் நடத்திய யாகத்தை கட்டாயம் கற்றறிய வேண்டும்.

அவ்வாறு கற்றறியும்போது, ஒரு விடயத்தை அவர் கவனித்துக் கொள்வது அவசியமாகும்.

அதாவது தக்கன், தான் செய்த யாகத்துக்குச் சிவனை அழைக்காததாலேயே தண்டனை பெற்றான்.

இந்தக் கதையை அறிந்துவிட்டு வடக்கின் ஆளுநர்; ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் மட்டும் யாகம் நடத்துவாராயின் பரிவாரங்கள் பாடம் புகட்டும்.

ஆகையால் அவரவர்க்கு உரிய அழைப்பையும் அவிப்பாகத்தையும் ஆளுநர்; தான் நடத்தும் யாகத்தில் சேர்த்துக் கொண்டால், அவரின் பதவிக்கும் பங்கம் இல்லை. யாகத்துக்கும் குந்தகம் இல்லை.

# தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்திய விவகாரம்

## லொஹானுக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் சமர்ப்பணம்

(மன்னார்)

லொஹான் ரத்வத்தே நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக செயற்பட்டுள்ளதாகவும் இலங்கையின் குற்றவியல் சட்டத்தின்படி பாரிய குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் நேற்றைய தினம் மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அரசியல் கைதி தொடர்பான வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் சமர்ப்பணம் மேற்கொண்டிருந்தார்.

நேற்றைய தினம் மன்னார் மேல் நீதிமன்றத்தில் சிவசுப்பிரமணியம் தில்லைராஜா என்ற அரசியல் கைதியின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த வழக்கில் பிரதான வழக்கை விட மேலதிக சமர்பணம் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நிலையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)

# வவுனியாவில் உயிரிழந்த மூதாட்டிக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் உயிரிழந்த மூதாட்டி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த மூதாட்டிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு ஊடாக பெறப்பட்டிருந்த உயிரிழந்த குறித்த மூதாட்டிக்கே (வயது-79) கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

# வவுனியாவில் விபத்து; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருகையில், வவுனியா வேப்பங்குளம் மன்னார் பிரதான வீதியில் ஒரே திசையில் பயணித்து கொண்டிருந்த கூலர் வாகனம் சமுர்த்தி வங்கிக்கு முன்னால் சென்றபோது திடீரென்று பிரேக் பிடித்ததால் பின்னால் வந்த முச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்ற சாரதி காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-299)

## மருத்துவக் குறிப்பு

எருக்கம்பாலில் மஞ்சளை உரைத்துக் கட்டியின் உச்சியில் மட்டும் காலை, மாலை தடவி வர கட்டி அப்படியே அமுங்கி விடும்.

# நவராத்திரி பாமாலை



கண்ணுக்கு ஒளி தரும் கண்ணுடை நாயகி என்
எண்ணத்தில் நிறைந்தருள்வாய் எம்குல தேவி நீ.
விண்ணோடு உலகேழும் படைத்தருளும் பொன்மகளே
பண்ணறியா சிறுமி நான் பாட வந்தேன் பா அருள்வாய்
சொல்லுக்கு சொல் தருவாய் சொல்லுக்குள் பொருளாவாய்
கல்லுக்கும் கவி அருளும் கலைமகளே நலம் தருவாய்
நாட்டரசன் கோட்டையிலே நடை பழகும் பொன்மயிலே
பாட்டரசன் கம்பன் தினம் பார்த்திருக்கும் பொன்னழகே
அழுகுணிச் சித்தரவர் அமர்ந்திருக்கும் மேடையிலே
அழகுடனே வீற்றிருந்த அள் சுரக்கும் கலையழகே
கண்ணின் மணி நீயே கனிந்துன்னைத் தொழுதாலே
கண்ணீர் பெருகுதடி கள்ள மனம் உருகுதடி
உண்மை நிறைந்திருக்கும் உள்ளத்தில் வாழ்பவளே
பெண்மைப் பேரொளியே பெருங்கனலே வரமருள்வாய்
நவராத்திரி நாயகியே நானிலமும் போற்றுதடி
நாவார உனைப்பாட நங்கையரே வரமருள்வாய்
மூன்று மகா சக்தியா நீ முக்கண்ணன் தேவியும் நீ
மும்மலங்கள் நீக்கியருள் முழு நிலவே வரமருள்வாய்
உன் நினைவால்வாழுகின்றேன்உன்னருளால்பாடுகின்றேன்
பொன்மகளே உன் பாதம் போற்றி தொழ வரமருள்வாய்

ரா.டன்சிகா
யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி

வெண்தாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதியே
கோவில் இன்றி உலகாளும் தாயே
மெய் நாவில் உறைபவளே
நீ கல்வியின் வடிவமே
சங்கீத தெய்வமே!
தல்வியின் அட்சயமே!
ஆயகலைகள் அருளும் சகலகலாவல்லியே!
அந்தமில்லா கல்வியின் ஆதி நீதானோ?


இந்திரஜித் ஹரிஜித்
தரம்-13 (2021),
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி.

இராத்திரி... நவராத்திரி...
புரட்டாதி மாதம் ஒன்பது நாட்கள்
விரதம் இருந்து முத் தேவியரை
வரம் வேண்டி வழிபடும் இராத்திரி...
நவ தானியட் போட்ட மண்மேல்
கும்பம் வைத்து மாலை சாத்தி
பிரதமை முதல் நவமி வரை
ஒன்பது நாட்கள் கொண்டாடும் இராத்திரி
முத் தேவியரின் புகழைப்பாடி
கல்வி செல்வம் வீரம் மூன்றும்
செல்வமாக கிடைத்திடவே
இல்லம் தோறும் கொண்டாடும் இராத்திரி.

சி.அருணன்
தரம்-08
யா/ வட்டு இந்துக் கல்லூரி.

# சத்திய தரிசனம்

## பிரமாண்ட லிங்கம்



- பூமித்தாயிடமிருந்து நான்கு பைசா கடன் வாங்கிய முயலின் கதை உனக்குத் தெரியுமா? வேறோர் இடத்திற்குப் போய்விட்டால் கடனைத் திருப்பித் தரவேண்டியதில்லை என்று அது நினைத்தது.
- ஒருநாள் தனது கால்களின் பலத்திற்கேற்ப வெகுவிரைவாக வேறோர் இடத்திற்கு ஓடியது.
- எங்கே கடன் வாங்கியதோ அந்த இடத்திலிருந்து மிகத் தொலைவுக்குப் போய்விட்டது.
- ஓரிடத்தில் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு "அப்பாடா, இனி யாரும் பணத்தைத் திருப்பிக் கேட்கமாட்டார்கள்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.
- ஆனால் அதற்குக் கீழிருந்த நிலத்திலிருந்து "பூமித்தாய் உன் காலுக்குக் கீழே இங்கேதான் இருக்கின்றேன். எவ்வளவு தூரம் ஓடினாலும் நீ என்னிடமிருந்து தப்பிக்க முடியாது" என்று ஒரு குரல் கேட்டதும் அதற்கு ஏற்பட்ட ஆச்சரியம்தான் எவ்வளவு!

(தொடரும்)

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

18



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

ஒக்டோபர் 2011 இல், கர்சாய் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் குடன் ஒரு மூலோபாயக் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். புது டில்லியில் உள்ள ஆர்.கே. மிஸ்ரா நினைவிடத்தில் கர்சாய் தனது உரையின் போது பார்வையாளர் களிடம் கூறினார் "இந்தியாவுடன் மூலோபாயக் கூட்டு ஒப்பந்தம் எந்த நாட்டிற்கும் எதிராக இயக்கப்படவில்லை. இது வேறு எந்த நிறுவனத் திற்கும் எதிராக இயக்கப்படவில்லை. இது ஆப்கானிஸ்தானின் நன்மைக் காக இந்தியாவின் பலத்தின் உதவி"

5 செப்டெம்பர் 2002 இல் கந்த ஹார் நகரில், கர்சாய் மீது படு கொலை முயற்சி செய்யப்பட்டது. புதிய ஆப்கானிஸ்தான் தேசிய இரா ணுவத்தின் சீருடை அணிந்த துப்பா க்கி ஏந்தியவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார், குல் ஆகாஷெர்ஸாய் (காந்தஹார் முன்னாள் ஆளுநர்) மற்றும் ஒரு அமெரிக்க சிறப்பு நடவடிக்கை அதிகாரி காயமடைந் தனர். ஜனாதிபதியின் பாதுகாவலர் களில் ஒருவரான துப்பாக்கிதாரியும், துப்பாக்கி ஏந்தியவரை வீழ்த்திய பார்வையாளரும் கர்சாயின் அமெ ரிக்க மெய்க்காப்பாளர்கள் துப்பாக் கியால் சுட்டதில் கொல்லப்பட்டனர்.

16 செப்டெம்பர் 2004: கிழக்கு ஆப்கானிஸ்தானில் கார்டெஸ் நகருக்கு செல்லும் வழியில் அவர் பறந்து கொண்டிருந்த ஹெலிகொப் டரை ரொக்கெட்டால் தாக்கி கர்சாய் மீது படுகொலை முயற்சி நடந்தது.

10 ஜூன் 2007: கஜினியில் தலிபான் கிளர்ச்சியாளர்கள் அவ ரைக் கொல்ல முயன்றனர், அங்கு அவர் பெரியவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். கிளர்ச்சியாளர்கள் ஏறக்குறைய 12 ரொக்கெட்டுகளை செலுத்தி அவரைக் கொல்ல முயன் றனர். அவற்றில் சில கூடத்திலிரு ந்து 200 மீற்றர் தொலைவில் விழுந்தன. இந்தச் சம்பவத்தில் கர்சாய் காயமடையவில்லை மற் றும் அவரது உரையை முடித்த பின்னர் அந்த இடத்திலிருந்து வெளியேறினார்.

27 ஏப்ரல் 2008: ஹக்கானி நெட்வேர்க்கைச் சேர்ந்த கிளர்ச்சி யாளர்கள் (ஹக்கானி நெட்வேர்க் என்பது ஆப்கானிஸ்தான் கெரில்லா கிளர்ச்சிக்குழு ஆகும். இது அமெ ரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் மற்றும் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிராக போரைச் செய்கிறது) . காபூலில் கர்சாய் கலந்து கொண்ட இராணுவ அணிவகுப் பைத் தாக்கதானியங்கி ஆயுதங்கள் மற்றும் ரொக்கெட் கையெறி குண்டு களைப் பயன்படுத்தினர். கர்சாய் எவ் வித காயமுமின்றி பாதுகாப்பாக இருந்தார், ஆனால் ஒரு பாராளு மன்ற உறுப்பினர், ஒரு பத்து வயது சிறுமி மற்றும் ஒரு சிறுபான்மை தலைவர் உட்பட குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பத்து பேர் காயமடைந்தனர்.

**5 செப்டெம்பர் 2002ல் கந்த ஹார் நகரில், கர்சாய் மீது படு கொலை முயற்சி செய்யப்பட்டது. புதிய ஆப்கானிஸ்தான் தேசிய இராணுவத்தின் சீருடை அணி ந்த துப்பாக்கி ஏந்தியவர் துப்பாக்கிச்சூடு நடத்தினார். அதன் பின் 2004, 2007 மற்றும் 2008 இலும் அவர் மீது படு கொலை முயற்சி செய்யப்பட்டது.**

2013 இல் அல்ஜசீரா தொலைக் காட்சிக்கு ஹமீத் கர்சாய் அளித்த பேட்டியில் தலிபான்களை அவரது "சகோதரர்கள்" என்று அழைத்தார். ஆப்கானிஸ்தான் அரசும் ஆப்கான் மக்களும் தலிபான்களை ஒழிக்க விரும்பவில்லை. மாறாக தலிபான் களை சமூகத்தில் மீண்டும் ஒருங் கிணைக்க விரும்புவதாக அவர் கூறினார். தலிபான்களை அவர் சகோதரர்கள் என்று அழைப்பது இது முதல் முறை அல்ல. முன்னதாக அவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்ட ஒருநாள் கழித்து, 2009 இல் அவரது வெற்றி உரையின் போது அவர் களை சகோதரர்கள் என்று அழை த்தார்.

14 செப்டெம்பர் 2015 அன்று, ஆப்கானிஸ்தானின் லோகர் மாகா ணத்தில் உள்ள தலிபான் பயிற்சி முகாம் மீதான தாக்குதலை ஹமீத் கர்சாய் நிறுத்தியதாக மாகாண பொலிஸ் தலைவர் ஜெனரல் தாவூத் அஹ்மதி கூறினார். இந்த முகாம் ஒரு தொடக்கத் தளமாக பயன்படுத் தப்பட்டது மற்றும் முகாமைக் கையாள் வதற்கு ஒரு இராணுவ நடவடிக்கை திட்டமிடப்பட்டது. இருப்பினும், கர்சாய் முகாம் மீது தாக்குதல் நடத்து வதைத் தடுத்தார். அந்த நேரத்தில் முகாமில் பயிற்சி பெற்ற சுமார் 200 போராளிகள் இருந்ததாக அஹ்மதி மேலும் கூறினார்.

### 2014 ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல்

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் இரண்டு சுற்றுகளாக நடை பெறும். முதல் சுற்றில் எந்த வேட் பாளருக்கும் தேவையான வாக்கு கள் (Majority) கிடைக்காவிட்டால், முதல் இரண்டு இடங்களைப் பிடிக் கும் வேட்பாளர்களுக்கு இடையே மீண்டும் போட்டி நடைபெறும்.

2014 இல் ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் ஏப்ரல் 5 அன்று நடைபெற்றது, இரண்டாவது சுற்று 14 ஜூன் அன்று நடைபெற்றது. அப் போதைய ஜனாதிபதி ஹமீத் கர்சாய் இரண்டு பதவிக்காலத்திற்கு மேல் போட்டியிட தகுதியற்றவராதலால் போட்டியிடவில்லை. ஜனாதிபதி நியமனங்களுக்கான பதவிக்காலம் 16 செப்டெம்பர் 2013 முதல் 6 ஒக் டோபர் 2013 வரையாகும். மொத்தம் 27 வேட்பாளர்கள் பதவிக்கு போட்டி யிடுவது உறுதி செய்யப்பட்டது.


இருப்பினும், ஒக்டோபர் 22 அன்று ஆப்கானிஸ்தானின் சுயா தீன தேர்தல் ஆணையம் 16 வேட் பாளர்களை தகுதி நீக்கம் செய்தது. 11 பேர் மட்டுமே போட்டியில் இருந் தனர். ஏப்ரல் 2014 மூன்று வேட் பாளர்கள் போட்டியைக் கைவிட்டு, மீதமுள்ள எட்டு வேட்பாளர்களில் சிலரை ஆதரிக்க முடிவு செய்தனர். கருத்துக் கணிப்புகள் அப்துல்லா மற்றும் அஷ்ரப்கானி ஆகியோரை முன்னிலை வகிப்பவர்களாகக காட்டின.

முதல் சுற்று முடிவடைந்த இர ண்டு மாதங்களுக்குப் பிறகு, ஜூன் 14 ஆம் திகதி முடிவடைந்த பிறகு இரண்டாவது சுற்று முடிவுகள் வந்தன. ஆரம்ப முடிவுகள் ஜூலை 2 ஆம் திகதியும் இறுதி முடிவு ஜூலை 22 ஆம் திகதியும் எதிர்பார்க் கப்பட்டது. இருப்பினும், மோசடி பற்றிய பரவலான குற்றச்சாட்டுகள் இந்த முடிவுகளை தாமதப்படுத்தின.

இதன் விளைவாக, அப்போதைய அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளராக இருந்த ஜோன் கெர்ரி, இறுதி வேட்பாளர்கள் கானி மற்றும் அப்துல்லா. இடையேயான பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் செய் தார்.

**ஆப்கானிஸ்தானில் ஜனா திபதித் தேர்தல் 5 ஏப்ரல் 2014 அன்று நடைபெற்றது, இரண் டாவது சுற்று 14 ஜூன் அன்று நடைபெற்றது. அப்போதைய ஜனாதிபதி ஹமீத்கர்சாய் இர ண்டு பதவிக் காலத்திற்கு மேல் போட்டியிட தகுதியற்றவராத லால் போட்டியிடவில்லை. இறுதி வேட்பாளர்கள் கானி மற்றும் அப்துல்லா ஆகியோரில் யார் வெற்றி பெற்றது என்ற இழு பறி நிலை தோன்றியது. தொடர் ச்சியான பேச்சு வார்த்தைகள் நடந்தன. பேச்சு வார்த்தை களுக்குப் பிறகு, வேட்பாளர் களும் 50-50 அதிகாரப் பகிர்வு அடிப்படையில் ஒரு தேசிய ஒற்றுமை அரசாங்கத்தை உரு வாக்குவதற்கான ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டனர். அதன் பிரகாரம் ஆப்கானிஸ் தான் ஜனாதிபதியாக அஷ்ரப் கானி தெரிவு செய்யப்பட்டார்.**

## அதிபர் தேர்தல் வேட்பாளர்கள் 2014



அஷ்ரப்கானி



அப்துல்லா

கானி, அப்துல்லா மற்றும் கெர்ரி இடையே தொடர்ச்சியான பேச்சு வார்த்தைகள் நடந்தன. பேச்சு வார்த் தைகளுக்குப் பிறகு, இரு வேட்பாளர் களும் 50-50 அதிகாரப் பகிர்வு அடிப்படையில் ஒரு தேசிய ஒற்றுமை அரசாங்கத்தை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒப்புக் கொண்டனர். (தொடரும்...)

## 31 பேர்...

கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 408ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வல்லிபுரம்...

களுக்குள் சப்பாத்துடன் சென்ற பொலிஸ் அதிகாரி தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கொட்டாச்சி என்பவரே இவ்வாறு மத நியதிகளை மீறி ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று நண்பகல் வருகை தந்த பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் ஆலய வெளிவீதியில் சப்பாத்துக்களை கழற்றிவிட்டு ஆலயங்களுக்குள் சென்று வழிபாடுகளை முன்னெடுத்த நிலையில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சப்பாத்துக்களை கழற்றாது ஆலயங்களுக்குள் சென்றுள்ளார். (ம-18,33)

## 30 ஆயிரம்...

சேதன பொட்டாசியம் குளோரைட் உரம் நேற்று இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி 30,000 மெட்ரிக் தொன் சேதன பொட்டாசியம் குளோரைட் உரம், கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (ம)

## பால் குடித்த...

சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குழந்தை அசைவற்றுக் காணப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் குழந்தையை எடுத்துவந்த நிலையில் குழந்தைக்கு ஏற்கெனவே உயிர் பிரிந்துவிட்டதாக வைத்தியசாலையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பள்ளிவளவு தணங்கிளப்பு வீதியைச் சேர்ந்த பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. (ம-30)

## நிதியமைச்சு...

அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 15 ரூபாயினாலும் ஒரு லீற்றர் டீசல் விலையை 25 ரூபாயினாலும் அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி கேட்டுக் கொண்டது என்று கம்மன்பில கூறினார்.

இந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார். (ம)

## கொழும்பில்...

கைவிடுவதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட உள்ளிட்ட சிலருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த குற்றச்சாட்டுக்களை முன்னெடுத்துச் செல்லப் போவதில்லை என மேல் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடத்தல் வழக்கில் 14ஆம் சந்தேக நபராக வசந்த கரன்னாகொட பெயரிடப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் இந்தக் கடத்தல் மற்றும் காணாமல்போதல் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அலரிமாளிகை...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நவராத்திரி விழா அலரிமாளிகையில் இடம்பெற்றது.

நவராத்திரி விழாவில் இந்திய மத்திய அரசின் மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியம் சுவாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

கோவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நவராத்திரி பூஜை வழிபாடு பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் துரைசாமி உதயராகவ குருக்கள் மற்றும் அருண் பிரசாந்தன் சர்மா குருக்கள் ஆகியோரினால் நடத்தப்பட்டது. (ம)

## போராட்டம்...

பெற்ற பேச்சுவார்த்தை எவ்வித முடிவும் இன்றி நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தமது போராட்டம் தொடரும் என அதிபர் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தை நிறைவுக்கு கொண்டு வரமுடியாது என்று ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## அயல் நாடுகளின்...

அயல் நாடுகளின் ஸ்திரத்தன்மையை, தமது நாடு அதிகளவில் எதிர்பார்க்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய இராணுவப் பயிற்சிகளின் மூலம் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குக் கிடைக்கும் தலைமைத்துவப் பண்புகள் குறித்தும் இதன்போது ஜனாதிபதி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பல தேச எல்லைகளால் சூழ்ந்துள்ள இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மலைசார்ந்த கடினமான பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத் தினருக்கான நலத்திட்டங்கள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபெறும் அதிகாரிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் பரிந்துரைக்கும் தரநிலைகள் போன்ற விடயங்களை ஜெனரல் மனோஜ் முகுந்த் ஜனாதிபதி கேட்டுத்தெரிந்து கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## போதை...

ஆண்டகை பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடியதைத் தெரிவித்தார்.

வடக்கு இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பில்லாதன் விரக்தி நிலை காரணமாகவே போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகிறது.

இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பின்மை காரணமாகவே வடக்கில் வாள் வெட்டுச் சம்பவங்கள், வன்முறை சம்பவங்கள், திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வேலையில்லாது சும்மா இருப்போருக்கு காசு தேவைப்படும் போதுதான் அவர்களை திருடுவதற்கு தூண்டுகின்றது எனத் தெரிவித்திருந்தார்.

மக்களுக்கு சேவை செய்யத்தான் பொலிஸார். ஆகவே பொலிஸார் அதிக அளவில் மக்களுடன் தொடர்பினைபேண வேண்டும் என பொலிஸ்மா அதிபர் கூறியதாக யாழ். மாவட்ட ஆயர் தெரிவித்தார். (ம-18,33)

## சுப்பி...

யன் சுவாமிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

பொருளாதார நிபுணரும் புள்ளியியல் வல்லுநருமான சுப்பிரமணியன் சுவாமி, பாதுகாப்புச் செயலாளராக ஜனாதிபதி பதவி வகித்த காலப்பகுதியில் நடத்தப்பட்ட மாநாடுகளின் போது, விரிவுரையாளராகவும் கலந்து கொண்டிருந்தார். (ம)

## பருத்தித்துறை...

பட்ட இந்திய மீனவர்களுடன் ஏற்பட்ட மோதலில் பருத்தித்துறைமுனை பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மீன்பிடி நடவடிக்கைக்காக பருத்தித்துறை மீனவர்கள் படகுகளில் சென்றிருக்கின்றனர். அதன்போது வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் இந்திய மீனவப் படகுகள் காணப்பட்டிருக்கின்றன.

அதேவேளை பருத்தித்துறை மீனவர்களின் வலைகளும் இந்திய மீனவ றோலர் படகுகளால் அறுக்கப்பட்டிருக்கின்றன.

சம்பவத்தை அடுத்து இது தொடர்பில் இரண்டு தரப்புக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்போது இந்திய மீனவர்கள் கூறிய ஆயுதங்கள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தியதாக பருத்தித்துறை மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ம-18,33)




























## சொர்க்கம் திருமண சேவை

31 வயது, கனடா, அஸ்வினி நட்சத்திரம், பட்டதாரிப் பெண்ணுக்கு பொருத்தமான மணமகனையும்
30 வயது, கனடா, சித்திரை நட்சத்திர மணமகனுக்கு பொருத்தமான மணமகளையும் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு (8233)
0014166661855
077 650 5097

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
இரத்தினசாமி அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (8231)

முன்பதிவுக்கு: 076 682 7368
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

## அமெரிக்க லொத்தர் விசா

2023ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
விரையுங்கள் பதிவுகள் ஆரம்பாகிவிட்டன (C-2791)
0768226244
55,000
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் நூற்றுக்கணக்கானோர் குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விசா வென்றவர்களின் விபரங்களை எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels இல் பதியுங்கள்! விசாவை வெல்லுங்கள்!

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8236)
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## தென்னந்தோட்டத்திற்கு வேலையாள் தேவை

பளையில் உள்ள தென்னந் தோட்டத்தில் தங்கிநின்று வேலை செய்வதற்கு ஆள் தேவை.
தனி நபர்களுக்கும் குடும்பப் பொறுப்பு குறைந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
078 423 9984

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2789)
0768226240 DHL

## A/L 2021/22/23 வீடு வரல்

வன்னி/ கிளி./ யாழ். English, Tamil
10 வருட MCQ விளக்கவுரை - Theory
CHEM - Singam 076 056 5786
MCQ, Essay செய்வித்தல் (PP) (8238)
BIO - வித்தியா 077 665 5290

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-2790)
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport [illegible]
இலங்கை விசா நீடித்து தரப்படும்.
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## IELTS DMI COMPUTER EDUCATION

0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 18/10/2021 Mon to Fri 8 am
ZOOM Online
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-2817)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.112, [illegible] 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| மருதங்கேணி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

# 23 இந்திய மீனவர்கள் கைது

வடமராட்சிகடற் பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் இரண்டு இலங்கைக் கடற் படையினரால்கைப் பற்றப்பட்டதுடன்மீன வர்கள் 23 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று மாலை இடம்பெற் றுள்ளது.

கைது செய்யப் பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமி ற்கு கொண்டு செல் லப்பட்டுள்ளதாகதெரி யவருகின்றது.(ம)

## வகுப்புகள் ஆரம்பம்

தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கான மற்றும் 2022 ஆம் ஆண்டு தரம் 1 இற்கு செல்லும் மாணவர்களுக்கான Tution வகுப்புகள் 15.10.2021 விஜயதசமி அன்று Zoom செயலி ஊடாக ஆரம்பம். பாடசாலை தொடங்கியதன் பின்பு நேரடியாக வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். (8232)
076 213 2317

## உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகம் ஒன்றுக்கு வேலை செய்ய ஓரளவு கணினி அறிவுடைய பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு (8234)
077 887 6969

## TECHNO WORLD

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை

A/L 2023
இலவச Zoom Class

புதிய பிரிவு ஆரம்பம் 16.10.2021 காலை 9.00

முற்றுமுழுதாக தேசிய பாடசாலை A/L தொழில்நுட்ப பிரிவு ஆசிரியர்களையும் மற்றும் Technical Collage விரிவுரையாளர்களையும் கொண்ட முன்னணி கல்வி நிறுவனம்

| | | |
|---|---|---|
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - | ராகவன் (B.sc)<br>முருகநிறோயன் (B.sc)<br>நிறோஜன் (B.sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | - | அருண்குமார் [B. Tech Hons (Eng.)]<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | - | திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc in Agri.)<br>சிவகுமார் (B.sc in Agri.) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | - | உமாகாந்தன் (BIT)<br>நஜன் (B.sc) |
| விவசாய விஞ்ஞானம் | - | சாரங்கன் (B.sc in Agri.)<br>திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc) |
| புவியியல் | - | தினேஷ் (B.A) |
| ஊடகக்கற்கை | - | N.கஜிதரன் (B.A) |
| கணிதம் | - | மோகன்ராஜ் (B.sc) |
| சித்திரம் | - | ஜெயந்தன் (B.A) |

2022, 2021, Day Class மாணவர்களும் புதிதாக இணைய விரும்பும் மாணவர்களும் இணைந்துகொள்ளலாம்.
காலை 10.00 மணிமுதல் 2.00 மணிவரை அனுமதிகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். (C-2816)

077 017 5346

## மரண அறிவித்தல்



### திரு. நடராஜக்குருக்கள் நமசிவாயம்

( இல. 160, சுப்பிரமணியம் & Co Company, Colombo - 11 )

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராஜக் குருக்கள் நமசிவாயம் நேற்று (13.10.2021) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அனுராதபுரம் கதிரேசன் கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் - ராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் பாலமகேஸ்வரி விஸ்வலிங்கம், காலஞ்சென்ற சிவஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள், கோமளாதேவி விசாகப்பெருமாள், சியாமளாதேவி விஜய குமார், பத்மாசனி உபேந்திரன், வாசுகி கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரி சிவசண் முகராஜா, யசோதா மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.10.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய், கட்டப்பிராய் இல்லத்தில் நடைபெற்று அன்னாரது பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8249)

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
021 223 2478
தகவல்:-
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.